## General Science Model Test Questions 22 in Tamil [Physics – 7]

1. மின் கடத்துத் திறனின் அலகு

(A) மோ (B) ஓம் (C) ∴பாரடே **(D) கூலூம்**

2. உராய்வினால் எதிர் மின்னூட்டம் பெற்றால் அக்கடத்தி

(A) எலக்ட்ரான்களை இழக்கிறது (B) நியூட்ரான்களை இழக்கிறது

**(C) எலக்ட்ரான்களை பெறுகிறது** (D) நியூட்ரான்களை பெறுகிறது

3. பாரன்ஹுட் முறையில் தனிச்சுழி வெப்பநிலை ($O^oA$) யின் மதிப்பு

**(A) -40°** (B) -459° (C) -100° (D) -300°

4. கீழ்க்காணும் கூற்றுகளை ஆய்க:

நிலைப்பாடு: ஒரு துகள் வட்டப்பாதையில் சுற்றி வருகிறது

காரணம் (R) I: வேகம் சீரானது

(R) II: திசைவேகம் மாறுகிறது

குறியீடுகள்:

(A) R (I) சரி ஆனால் R (II) தவறு
(B) R (II) தவறு ஆனால் R (I) சரி
(C) R (I) மற்றும் R (II) தவறு
**(D) இரண்டும் சரி**

5. விசை – நிறை x முடுக்கம் என்ற வாய்ப்பாடு எந்த விதியிலிருந்து பெறப்படுகிறது?

**(A) நியூட்டனின் இரண்டாம் விதி** (B) ∴பாரடே விதி

(C) ஜீல்விதி (D) கூலூம் விதி

6. ஒரு நுட்பத் தாராசின் இடது, வலது தட்டுகளில் முறையே ஒரு பொருளும், சம எடைகளும் உள்ளன. இப்போது இடது தட்டின் கீழே வேகமாக காற்றை ஊதினால் அத்தட்டு

(A) கீழே இறங்கும் (B) மேலே செல்லும்

(C) பாதிக்காது **(D) முதலில் அலைவுறும்**

7. பூமிக்கு அருகே நகரும் இரு கோள்கள்

**(A) சுக்கிரன், செவ்வாய்** (B) செவ்வாய், வியாழன்

(C) புதன், சனி (D) யுரேனஸ், நெப்டியூன்

8. வானவில்லின் முழுவடிவம்

(A) வட்டவில் (B) வட்டம் (C) நீள் வட்டம் **(D) பரவளையம்**

9. (கண்ணாடி) வில்லையில் ஒளி புகுகையில் எதில் மாற்றம் ஏற்படும்?

(A) அலைநீளம் (B) அதிர்வெண் (C) திசைவேகம் **(D) (A) மற்றும் (C)**

10. அணுகுண்டு எதை அடிப்படையாகக் கொண்டது?

**(A) அணுக்கரு பிளவு** (B) அணுக்கரு சேர்க்கை

(C) நியூட்டன் விதிகள் (D) கூலூம் விதி

11. ஹைட்ரஜன் குண்டு எதன் அடிப்படையில் வெடிக்கிறது?

(A) அணுக்கரு பிளவை **(B) அணுக்கரு சேர்க்கை**

(C) நியூட்டன் விதிகள் (D) கூலூம் விதி

12. கீழ்க்கண்டவற்றுள் எது சரியாகப் பொருத்தப்பட்டுள்ளது?

(A) விசையின் திருப்புத்திறன் - வாட் (B) வேலை – ஜீல்-வினாடி

(C) திறன் - நியூட்டன்-மீட்டர் **(D) விசையின் அலகு – நியூட்டன்**

13. சாலையில் செல்லும் காரின் மீது மழை செங்குத்தாக விழுகின்றது. அம் மழைத்துளிகள்

**(A) முன் கண்ணாடி மீது மாத்திரம் விழும்** (B) பின் கண்ணாடி மீது மாத்திரம் விழும்

(C) இரு கண்ணாடிகள் மீதும் விழும் (D) எந்தக் கண்ணாடியிலும் விழாது

14. 'ஒரு திரவத்தில் மூழ்கடிக்கப்பட்ட பொருள், அது வெளியேற்றிய திரவத்தின் எடைக்கேற்ற மேல்நோக்கு விசையை உணரும்' இது

(A) நியூட்டனின் இயக்க விதி (B) டியூலங் மற்றும் பெட்டிட் விதி

(C) மிதப்பு விதி **(D) ஆர்கிமிடீஸ் தத்துவம்**

15. வாகனங்களில் நீரியல் நிறுத்திகளின் தத்துவம்

(A) பெர்னௌலியின் தத்துவம் (B) பாய்ஸ்சூலின் தத்துவம்

**(C) பாஸ்கலின் தத்துவம்** (D) ஆர்க்கிமிடீஸ் தத்துவம்

16. ஒரு லென்சின் திறன் + 1 டயோப்டார் எனில், அதனுடைய குவி தூரம்

(A) 1 செ.மீ (B) 10 செ.மீ **(C) 100 செ.மீ** (D) 1000 செ.மீ

17. காற்றில் ஒளியின் வேகம் $3 \times 10^{10}$ செ.மீ / வினாடி $\mu = 1.5$ கொண்ட கண்ணாடியில் அதன் வேகம்

(A) $4.5 \times 10^{10}$ செ.மீ / வினாடி (B) $3 \times 10^{10}$ செ.மீ / வினாடி

**(C) $2 \times 10^{10}$ செ.மீ / வினாடி** (D) $9 \times 10^{10}$ செ.மீ / வினாடி

18. நீரின் அடர்த்தி --------------- வெப்பநிலையில் பெருமமாகும்

(A) $0^\circ$ C **(B) $4^\circ$ C** (C) $100^\circ$ C (D) $-10^\circ$ C

19. நிலைமாற்றத்தின் வெப்பநிலை

(A) உயருகிறது (B) குறைகிறது



winmeen.com

**(C) மாறாது அமைகிறது** (D) உயரலாம் அல்லது குறையலாம்

20. கீழ்க்கண்ட வாக்கியங்களைக் கவனி

கூற்று (A) : இடியும் மின்னலும் வானில் ஒரே நேரத்தில் தோன்றுகின்றன. எனினும் மின்னல் முதலிலும் இடிச்சத்தம் பின்னரும் நம்மை வந்தடைகின்றன.

காரணம் (R) : ஒளி, ஒலியைக் காட்டிலும் அதிகமான வேகத்துடன் பயணிப்பதால் மின்னல் முதலிலும் இடியோசை பின்னரும் நம்மை வந்தடைகின்றன.

கீழ்காணும் குறியீடு மூலம் சரியான விடையைத் தேர்ந்தெடுக்க:

(A) (A) சரி ஆனால் (R) தவறு (A) தவறு ஆனால் (R) சரி
(B) **(A) மற்றும் (R) இரண்டும் சரி** (A) மற்றும் (R) இரண்டும் தவறு

21. கடலின் ஆழத்தைக் கண்டறியப் பயன்படும் கருவி

(A) ரேடார் **(B) ∴பேதோமீட்டர்** (C) சோனார் (D) மிதவைமானி

22. பட்டியல் I-ஐ பட்டியல II-உடன் பொருத்தி. கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளைக் கொண்டு சரியான பதிலைத் தேர்ந்தெடு

| பட்டியல் I | பட்டியல் II |
|---|---|
| (a) மின்னழுத்தம் | 1. வாட் |
| (b) மின்தடை | 2. ஆம்பியர் |
| (c) மின்னோட்டம் | 3. ஓம் |
| (d) மின்திறன் | 4. வோல்ட் |

குறியீடுகள்:

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| **(A)** | **4** | **3** | **2** | **1** |
| (B) | 1 | 3 | 4 | 2 |
| (C) | 2 | 1 | 3 | 4 |
| (D) | 1 | 2 | 3 | 4 |

23. இறக்கு (Step-down) மின்மாற்றியில்

**(A) துணைச் சுற்றின் எண்ணிக்கையைவிட முதன்மைச் சுற்றின் எண்ணிக்கை அதிகம்**

(B) துணைச்சுற்றின் எண்ணிக்கையை விட முதன்மைச் சுற்றின் எண்ணிக்கை குறைவு

(C) முதன்மை மற்றும் துணைச் சுற்றுகளின் எண்ணிக்கைகள் சமம்

(D) இவற்றுள் எதுவுமில்லை

24. சூரிய ஒளி நம்மை வந்தடைய எடுத்துக்கொள்ளும் நேரம்

(A) 2 நிமிடங்கள் (B) 4 நிமிடங்கள் **(C) 8 நிமிடங்கள்** (D) 16 நிமிடங்கள்

25. x- கதிர்கள் இதனை ஊடுருவிச் செல்ல முடியாது

winmeen.com

(A) கண்ணாடி **(B) எலும்பு** (C) மரம் (D) மனிதத்தசை

26. ஒரு பொருள் புவியீர்ப்பு விசையிலிருந்து விடுபட்டுச் செல்ல அதற்கு தரப்பட வேண்டிய மீச்சிறுதிசை வேகம்

(A) 8.2 மீட்டர்/வினாடி (B) 11.2 மீட்டர்/வினாடி

(C) 8.2 கிலோ மீட்டர்/வினாடி **(D) 11.2 கிலோ மீட்டர்/வினாடி**

27. கூற்று (A) : ஒரு இரும்புத்துண்டு பாதரசத்தில் மிதக்கும், நீரில் மூழ்கும்

காரணம் (R) : இரும்பின் அடர்த்தி நீர், பாதரசத்தை விட குறைவு

கீழ்க்கண்ட குறியீடுகளை பயன்படுத்தி சரியான விடையளி:

(A) (A) மற்றும் (R) சரி, (R), என்பது (A) விற்கு சரியான விளக்கம்
(B) (A) மற்றும் (R) சரி, (R), என்பது (A) விற்கு சரியான விளக்கம் அல்ல
**(C) (A) சரி ஆனால் (R) தவறு**
(D) (A) தவறு ஆனால் (R) சரி

28. பட்டியல் I மற்றும் பட்டியல் II ஆகியவற்றை சரியாகப் பொருத்தி கீழே கொடுத்திருக்கும் தொகுப்பினைப் பயன்படுத்தி விடையைத் தோந்தெடுத்து எழுதுக.

| பட்டியல I | பட்டியல் II |
|---|---|
| (a) விசையின் திருப்புத் திறன் | 1. ஜீல் |
| (b) ஆற்றல் | 2. FxS |
| (c) திறன் | 3. நியூட்டன் - மீட்டர் |
| (d) வேலை | 4. வாட் |

குறியீடுகள்

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| **(A)** | **3** | **1** | **4** | **2** |
| (B) | 2 | 3 | 4 | 1 |
| (C) | 3 | 4 | 1 | 2 |
| (D) | 2 | 4 | 3 | 1 |

29. கானல் நீர் தோன்றுவது

(A) ஒளிப்பிரதிபலிப்பால் **(B) முழு அக பிரதிபலிப்பால்**

(C) விளிம்பு விளைவால் (D) ஒளி விலகலால்

30. அனிராய்டு பாரமானியின் பயன்படுத்தப்படும் திரவம்

(A) பாதரசம் (B) ஆல்கஹால் (C) தூயநீர் **(D) எவ்வித திரவமும் இல்லை**

31. ஒளியின் எந்த நிறம் நீண்ட அலை நீளம் கொண்டுள்ளது?

(A) ஊதா (B) பச்சை (C) மஞ்சள் **(D) சிகப்பு**

32. பின்வரும் கூற்றுகளை ஆய்க:

I. கொதித்தல் எல்லா வெப்பநிலைகளிலும் நிகழும்

II. ஆவியாதல் ஒரு குறித்த வெப்பநிலையில் நிகழும்.

III. கொதித்தல் திரவத்தின் மேற்பரப்பில் நிகழும்

IV. ஆவியாதல் திரவம் முழுவதும் நிகழும்

மேலே சொன்ன கருத்துகளில்

(A) அனைத்தும் சரி **(B) அனைத்தும் தவறு**

(C) I, II சரி ஆனால் III, IV தவறு (D) I, III சரி ஆனால் II, IV தவறு

33. உயர்ந்த வெப்ப நிலையைக் கணக்கிட உதவும் உபகரணத்தின் பெயர்

(A) ஹைஜரோமீட்டர் **(B) பைரா மீட்டர்** (C) போட்டோ மீட்டர் (D) சோனா மீட்டர்

34. ஒலி இதன் ஊடே பரவுவதில்லை

(A) வாயுக்கள் (B) திடப்பொருட்கள் (C) நீர் **(D) வெற்றிடம்**

35. குழாய் உள்ள ஊதுகுழல் கருவி

(A) புல்லாங்குழல் (B) ஆர்மோனியம் (C) தாரை **(D) நாதஸ்வரம்**

36. ஒரு 100 வாட், 220 வோல்ட் கொண்ட விளக்கு எடுத்துக் கொள்ளக்கூடிய மின்னோட்டம்

(A) 2.2 ஆம்பியர் **(B) 5/11 ஆம்பியர்** (C) 22,000 ஆம்பியர் (D) 1.1 ஆம்பியர்

37. காந்தக் கேடயமாக பயன்படும் பொருள்

(A) மரம் **(B) தேனிரும்பு** (C) கண்ணாடி (D) காகிதம்

38. x-கதிர்கள் இதன் வழியே ஊடுருவி செல்லாது

(A) கண்ணாடி **(B) எலும்பு** (C) மரம் (D) தோல்

39. ஒரு எலக்ட்ரானுடைய எடை $9.11 \times 10^{-28}$ கிராம் எனில் ஒரு கிராமில் எத்தனை எலக்ட்ரான்கள் உள்ளன?

**(A) $1.09 \times 10^{27}$** (B) $2.56 \times 10^{24}$ (C) $2.18 \times 10^{27}$ (D) $3.27 \times 10^{27}$

40. காற்றின் விசையையும், நேர் வேகத்தினையும் அளக்க உதவும் கருவி

(A) ஆல்டி மீட்டர் (B) அம்மீட்டர் **(C) அனிமா மீட்டர்** (D) மானோ மீட்டர்

41. மின்விளக்குகள் உருவாக்கத்தில், டங்க்ஸ்டன் மின்னிழை பயன்படுத்தப்படுகிறது, ஏனென்றால்

(A) அது சிக்கனம் மற்றும் நீடித்த பயன் அளிக்க கூடியது

(B) மற்ற உலோகங்களைவிட மலிவானது

**(C) அது அதிகமான உருகுநிலை உடையது**

(D) மின் விளக்கை மிகவும் பிரகாசமாக எரிய வைக்கக் கூடியது

42. கீழே உள்ள கூற்றில் எது சரியானதல்ல?

(A) எல்லா வெப்பநிலையிலும் ஆவியாகின்றது

**(B) அழுத்தத்தினால் ஆவியாகின்ற விகிதம் அதிகரிக்கின்றது**

(C) திரவத்தின் மேல் பரப்பிலிருந்து ஆவியாகின்ற விகிதம் நடைபெறுகிறது

(D) குளிர்ச்சியடைவதைத் தொடர்ந்து ஆவியாகின்றது

43. ஐன்ஸ்டைன் அவர்களுக்கு நோபல் பரிசு பெற்றுத் தந்த ஆய்வு

(A) தனிச் சார்வியல் கோட்பாடு (B) பொதுச் சார்பியல் கோட்பாடு

(C) பிரவுனியன் இயக்கம் **(D) ஒளிமின் விளைவு**

44. சிலிகான் என்பது ஒரு

(A) கடத்தி (B) அரிதில் கடத்தி **(C) குறைக்கடத்தி** (D) உலோகம்

45. செயற்கைக் கோள் தகவல் தொடர்பிற்கும் பயன்படுத்தப்படுவது

(A) ரேடியோ அலைகள் **(B) மைக்ரோ அலைகள்**

(C) அகச்சிவப்பு கதிர்கள் (D) புறஊதாக் கதிர்கள்

46. பட்டியல் I மற்றும் பட்டியல் II ஆகியவற்றை சரியாகப் பொருத்தி கீழே கொடுத்திருக்கும் தொகுப்பினைப் பயன்படுத்தி விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக

| பட்டியல் I | பட்டியல் II |
|---|---|
| (a) ரேடியம் | 1. ராண்ட்ஜன் |
| (b) x கதிர் | 2. அலெக்ஸாண்டர் பிளெமிங் |
| (c) பெனிசிலின் | 3. ஐன்ஸ்டின் |
| (d) ரிலேடிவிடி கொள்கை | 4. மேடம் கியூரி |

குறியீடுகள்

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| (A) | 1 | 2 | 3 | 4 |
| (B) | 4 | 3 | 2 | 1 |
| **(C)** | **4** | **1** | **2** | **3** |
| (D) | 3 | 2 | 4 | 1 |

47. மின்னோட்டம் என்பது இவைகளில் ஓட்டமாகும்

(A) அணுக்கள் **(B) சார்பற்ற எலெக்ட்ரான்கள்**

(C) வேலன்சி எலக்ட்ரான்கள் (D) மூலக்கூறுகள்

48. எலெக்ட்ரானின் நிறை

**(A) $9.11 \times 10^{-26}$ கிராம்** (B) $1.6 \times 10^{-20}$ கிராம்

(C) 6.625 x $10^{-27}$ கிராம் (D) 3 x 10 கிராம்

49. ரெ.ஃ.பிரிஜிரேட்டரில் உள்ள தெர்மோஸ்டேட்டின் வேலை

(A) ரெ.ஃ.பிரிஜிரேட்டரை சூடாக்குதல் **(B) தட்ப வெப்பநிலையை சீராக்குதல்**

(C) ரெ.ஃ.பிரிஜிரேட்டரை துவக்குதல் (D) ரெ.ஃ.பிரிஜிரேட்டரை நிறுத்துதல்

50. கோள் இடைவெளி இடங்களிலிருந்து சிறுதுகள்கள் நமது காற்று மண்டலத்தில் நுழையும் போது மிளிர்கின்றன அவை

(A) அஸ்டிராய்டுகள் **(B) மீடியோர்கள்**

(C) கற்கள் (D) நியூட்ரான் விண்மீன்கள்

51. புதிதாகக் கண்டுபிடித்த அதிவெப்ப மிகைக் கடத்திகள்

**(A) இன் ஆர்கேனிக் பாலிமர்ஸ்** (B) திரவ நைட்ரஜன்

(C) மெட்டல் அல்லாய்ஸ் (D) செராமிக் ஆக்ஸைட்ஸ்

52. ஆய்க:

கூற்று (A) : சூரியக் குடும்பத்தில் மிகவும் பிரகாசமான கோள் வீனஸ்

காரணம் (R) : அது சூரியனுக்கு மிகவும் அருகில் உள்ளது

கீழ் உள்ளவற்றைக் கொண்டு சரியான விடையளி:

**(A) (A) மற்றும் (R) சரி**
(B) (A) மற்றும் (R) தவறு
(C) (A) சரி ஆனால் (R) தவறு
(D) (A) தவறு ஆனால் (R) சரி

53. ரயில் பாதைகள் ஏன் கருங்கற் ஜல்லியால் மூடப்பட்டுள்ளன?

I. ரயில் அதன் மேல் நகரும் போது ஏற்படும் அழுத்த மாறுபாட்டை தாங்கவும், நெகிழ்வு தன்மையை கொடுக்கவும்

II. அது நீர் தேங்காமல் வடிவதற்கு உதவுகிறது

(A) I மட்டும் **(B) II மட்டும்** (C) I மற்றும் II ம் இல்லை (D) I மற்றும் II

54. கிட்டார் மற்றும் வயலின் ஓசையை வேறுபடுத்தி அறியலாம் எவ்வாறு எனில் அவற்றிலுள்ள வேறுபாட்டினால்

**(A) அலை அதிர்வெண் அல்லது செறிவு** (B) மரத்தின் தரம்

(C) மிகுந்த ஒளி (D) கருவியினை வாசிக்கும் முறை

55. வெப்பமான எண்ணெய்யில் நீர் தெளிக்கும் போது ஏன் வேலை சிதறும் ஓசை ஏற்படுகிறது?

(A) நீரின் கொதிநிலை, எண்ணெய்யின் கொதிநிலையை விட அதிகம்.

**(B) எண்ணெய்யின் கொதிநிலை, நீரின் கொதிநிலையை விட அதிகம்**

(C) எண்ணெயும் நீரும் கலப்பதில்லை

(D) எண்ணெயும் நீரும் கலந்து ஒரு கூட்டுப் பொருளாகிறது

56. கானல் நீர் தோன்ற காரணம்

(A) உயர் வெப்பநிலையில் ஒளி ஈர்ப்பு அதிகரிப்பதால்

(B) வெப்பநிலையில் ஏற்படும் மாற்றத்தினால் காற்றின் ஒளி சிதறல் குறியீடு மாறுவதால்

**(C) முழுமையான உள் பிரதிபலிப்பு**

(D) உயர் வெப்ப நிலையில் ஒளி ஈர்ப்பு குறைவதால்

57. புல் பசுமை நிறமாகக் காணப்படுவதற்கு காரணம்

**(A) ஒளி நிறமாலையில் பசுமை நிறத்தைத் தவிர பிற நிறங்களை உட்கவர்ந்து கொள்வதால்**

(B) ஒளி நிறமாலையில் பசுமை நிறத்தை மட்டும் உட்கவர்வதால்

(C) புல் வெளிப்படுத்தும் பசுமை நிறத்தை மட்டும் கண் உட்கவர்ந்து கொள்வதால்

(D) இவற்றுள் எதுவும் இல்லை

58. ஊஞ்சலில் அமர்ந்து ஆடும் ஒரு பெண் எழுந்து நின்று ஊஞ்சலாட்டத்தைத் தொடரும் போது, ஊஞ்சலின் அலைவு நேரம்

(A) மாறாது **(B) அதிகரிக்கும்** (C) குறையும் (D) சுழியாகும்

59. ஒரு வெப்பமான பொருள் கதிர்வீச்சில் மூலம் வெப்பத்தை விரைவாக இழக்க அதன் பரப்பு அமைவது

(A) வெண்மையாகவும், பளபளப்பாகவும் (B) வெண்மையாகவும், சொரசொரப்பாகவும்

(C) கருமையாகவும், பளபளப்பாகவும் **(D) கருமையாகவும், சொரசொரப்பாகவும் இருத்தல் வேண்டும்**

60. கீழ்க்கண்டவைகளில் தவறான விடையை எடுத்து எழுதுக

**(A) வெப்பமானது ஓர் ஆடியில் பட்டால் பிரதிபலிக்கும்**

(B) வெப்பத்தை வேலையாக மாற்ற முடியும்

(C) வெப்பக்கதிர் வெற்றிடத்தில் பாயாது

(D) வெப்பம் ஒரு சக்தி

61. தெர்மாஸ் குடுவையில் உள்ள சூடான பாலை வேகமாக குலுக்கும் போது

(A) பாலின் வெப்பநிலை மேலும் உயரும் (B) பாலின் வெப்பநிலை சிறிதளவு குறையும்

**(C) வெப்பநிலை மாறாது** (D) முதலில் அதிகரித்து பிறகு குறையும்

62. கீழ்க்கண்டவற்றுள் மின்கடத்தும் திறன் மிக அதிகம் உள்ள உலோகம் எது?

(A) Zn (B) Fe **(C) Ag** (D) Cu

63. பசை மின்கலத்தில் நேர் மின்வாய் என்பது

(A) துத்தநாகம் **(B) கார்பன்** (C) தாமிரம் (D) $PbO_2$

64. நிறப்பிரிகை நிகழ்வில் அதிகமாக விலகலடையும் நிறம்

(A) சிவப்பு (B) பச்சை (C) நீலம் **(D) ஊதா**

65. $-13^{\circ}C$ வரையிலான குறை வெப்பத்தை உருவாக்க உறைக் கலவையில் உள்ள பனிக்கட்டி மற்றும் உப்புகளின் விகிதம்

(A) 1 : 3 (B) 2 : 1 **(C) 3 : 1** (D) 1 : 2

66. பின்வருவனவற்றில் எது மின்காந்த இயல் அற்றது?

**(A) ஆல்பாக் கதிர்கள்** (B) x-கதிர்கள்

(C) காமாக் கதிர்கள் (D) புறஊதாக் கதிர்கள்

67. மூலக்கூறு எல்லையின் வீச்சு

(A) $10^{8}$ செ.மீ **(B) $10^{-8}$ செ.மீ** (C) $10^{8}$ மீ (D) $10^{-8}$ மீ

68. 5 கி.கி நிறையுள்ள நீர் உள்ள வாளியொன்றை 10 மீட்டர் ஆழமுள்ள கிணற்றிலிருந்த இழுக்கச் செய்யப்படும் வேலையின் அளவைக் கணக்கிடுக.

(A) 4.90 ஜீல் (B) 49 ஜீல் **(C) 490 ஜீல்** (D) 98 ஜீல்

69. நாடாக்களில் ஒலியைப் பதிவு செய்யும் முறையை முதன்முதலில் கண்டுபிடித்தவர்

(A) பிளமிங் (B) ஆம்பியர் **(C) போல்சன்** (D) பெக்கொரல்

70. காந்த ஆற்றலை முதன் முதலில் மின்னாற்றலாக மாற்றிய அறிவியலார்

(A) ஆம்பியர் **(B) பாரடே** (C) போல்சன் (D) ஒயர்ஸ்டட்

71. மின்புலங்களால் விலக்கமடையாக் கதிர்கள்

(A) ஆல்பா கதிர்கள் (B) பீட்டா கதிர்கள்

**(C) காமா கதிர்கள்** (D) நேர்மின் கதிர்கள்

72. ரேடியோ கோபால்ட் பயன்படுவது

**(A) புற்றுநோய் சிகிச்சைக்கு** (B) அணுக்கரு பிளவு நிகழ்த்த

(C) அணுக்கரு இணைவு நிகழ்த்த (D) அணுவின் அமைப்பை அறிய

73. ஒலியின் திசைவேகம் உச்சமதிப்புடையதாக இருப்பது

(A) வெற்றிடத்தில் (B) நீரில் (C) காற்றில் **(D) எஃகில்**

74. ஒரு பெண்ணின் குரலொலி, ஆணின் குரலொளியை விட கீச்சென்றிருப்பதற்கு காரணம்

**(A) உயர்ந்த அதிர்வெண்** (B) உயர்ந்த வீச்சு

(C) குறைந்த அதிர்வெண் (D) வலுவற்ற குரல்நாண்கள்

75. பின்வருவனவற்றில் எந்தக் கருவியானது மின் ஆற்றலை இயக்க ஆற்றலாக மாற்றுகிறது?

(A) மின் ஜனனி (B) மின் மாற்றி **(C) மின் மோட்டார்** (D) தூண்டுக்கருவி

76. அணுக்கரு பிளவு வினைகள் நிகழ்வது

**(A) அணு உலைகளில்** (B) வேதி வினைகளில்

(C) ஹைடிரஜன் குண்டுகளில் (D) சூரியனில்

77. சூரியனிடமிருந்து மிகுந்த அதிக அளவில் வெளிப்படும் ஆற்றலுக்குக் காரணம்

(A) அணுக்கரு பிளவு **(B) அணுக்கரு இணைப்பு**

(C) வாயுக்கள் எரிதல் (D) இதுவரை தெரியவில்லை

78. கீழ்க்கண்டவற்றுள் தனிமமோ அல்லது கூட்டுப் பொருளாக இல்லாதது எது?

(A) வெள்ளி (B) நீர் **(C) காற்று** (D) சர்க்கரை

79. சம மின்னழுத்த பரப்பானது

**(A) எப்போதும் சுழி மின்னழுத்த பேதத்தைக் கொண்ட பரப்பாகும்**

(B) நேர் மின்னழுத்தத்தைக் கொண்ட பரப்பாகும்

(C) எதிர் மின்னழுத்தத்தைக் கொண்ட பரப்பாகும்

(D) ஒரே மின்னழுத்தத்தை எல்லாப் புள்ளிகளிலும் கொண்ட பரப்பாகும்

80. கம்பிச் சுருள் பொதுவாக தாமிரத்தை விட எ∴கினால் ஆனது. ஏனெனில்,

**(A) எ∴கு அதிக மீட்சித்தன்மை (Elastic Property) உடையது**

(B) எ∴கு குறைந்த மீட்சித்தன்மை உடையது

(C) எ∴கு தட்பவெப்ப நிலைக்கு ஏற்றவாறு எளிதில் துருப்பிடிக்காது

(D) எ∴கு தாமிரத்தை விட கடினமானது

81. சம மின்னூட்டத்தை இரு வெவ்வேறு ஆரமுள்ள கோளங்களுக்கு கொடுக்கும் போது, அவைகளின் மின்னழுத்தமானது

**(A) சிறிய கோளத்தில் அதிகமாக இருக்கும்**

(B) பெரிய கோளத்தில் அதிகமாக இருக்கும்

(C) இரு கோளத்திலும் சமமாக இருக்கும்

(D) அக்கோளங்கள் செய்யப்பட்ட பொருளைப் பொறுத்து இருக்கும்

82. -50 வோல்ட் மின்னழுத்தமுள்ள ஒரு புள்ளியிலிருந்து -10 வோல்ட் மின்னழுத்தமுள்ள புள்ளிக்கு ஒரு எலக்ட்ரானைக் கொண்டுவர எடுத்துக் கொண்ட மின்னழுத்த வேலை

(A) +40 eV (B) -40 eV (C) +60 eV **(D) -60 eV**

83 ஹைட்ரஜன் அணுவின் எலக்ட்ரான்-புரோட்டான் மின்னழுத்த சக்தி அதன் அடிநிலையில் (Ground State)

(A) +13.6 eV **(B) -13.6 eV** (C) +27.2 eV (D) -17.2 eV

84. பின்வருவனவற்றுள் சரியான மின்கடத்தும் ஆற்றல் வரிசையைத் தேர்ந்தெடுக்கவும்

(A) கண்ணாடி > கிராபைட் > தண்ணீர் (B) தண்ணீர் > கண்ணாடி > கிராபைட்

(C) கிராபைட் > கண்ணாடி > தண்ணீர் **(D) கிராபைட் > தண்ணீர் > கண்ணாடி**

85. வான்வெளித் தொலைவுகளை அளக்கப் பயன்படும் அலகு

(A) ஆங்க்ஸ்ட்ராம் (B) கிலோமீட்டர் (C) கடல் மைல்கள் **(D) ஒளியாண்டு**

86. ஒளி அலை மற்றும் ஒலி அலைக்கு இடையேயனான ஒரு முக்கிய வேறுபாடு, ஒளியானது

(A) ஓர் அலை (B) எதிரொலிக்கும்

(C) மூலைகளில் வளைந்து செல்லும் **(D) வெற்றிடத்தின் வழியே செல்லும்**

87. கட்டிடத்திற்கு வென்டிலேட்டர்கள் அமைக்கப்படுவதற்கான காரணம்

(A) வெளியிலிருந்து ஆக்ஸிஜன் நுழைய

**(B) கட்டிடத்திலுள்ள உயிருள்ள பிராணிகள் சுவாசித்தலால் வெளியேறும் கார்பன்டை ஆக்ஸைடு மற்றும் வியர்வையை வெளியேற்ற**

(C) வெளியிலிருந்து ஈரம் உள்ளே நுழைய

(D) ஒளியானது உள்ளே நுழைய

88. கட்புலனாகும் நிறமாலைப் பகுதியின் அலை நீள நெடுக்கம் எது?

(A) 1300 A- 8000 A **(B) 3900 A – 7600 A**

(C) 2500 A – 5000 A (D) 8000 A – 8500 A

89. சமதள ஆடி ஒன்றை நோக்கி ஒரு மனிதன், 1 மீ/வி வேகத்துடன் நகரும் போது, நகரும் மனிதனின் பிம்பம் அவனை நோக்கி வரும் சார்பு திசைவேகம்

(A) 0.5 மீ/வினாடி (B) 1 மீ/வினாடி **(C) 2 மீ/வினாடி** (D) 3 மீ/வினாடி

90. கீழ்க்கண்ட எந்த உலோகம் மின்காந்தத்தை உருவாக்க மிகவும் சிறந்தது?

(A) தாமிரம் (B) டங்ஸ்டன் **(C) தேனிரும்பு** (D) எஃகு

91. மின் விளக்கினுள் பயன்படும் இழை செய்யப்பட்ட உலோகம்

(A) தாமிரம் (B) இரும்பு (C) காரீயம் **(D) டங்ஸ்டன்**

92. அணுக்கரு ஒன்றினுள் இருப்பது

**(A) புரோட்டான்கள் மற்றும் நியூட்ரான்கள்** (B) புரோட்டான்கள் மற்றும் எலக்ட்ரான்கள்

(C) நியூட்ரான்கள் மற்றும் எலக்ட்ரான்கள் (D) நியூட்ரான்கள் மட்டும்

93. கீழ்க்கண்டவற்றுள் வெற்றிடத்தில் விரைவாக விழுவது எது?

(A) மரப்பந்து

(B) பறவை இறகு

(C) எஃகு பந்து

**(D) மேற்கண்ட அனைத்தும் ஒரே வேகத்தில் விழும், ஏனெனில் வெற்றிடத்தில் காற்றினால் ஏற்படும் தடை இல்லை**

94. மீயொலியின் அதிர்வெண் வரம்பு

(A) 20 KHz- க்கும் குறைவு (B) 2 KHz- க்கும் குறைவு

**(C) 20 KHz- க்கும் அதிகம்** (D) 20,000 KHz- க்கும் அதிகம்

95. ஒளியின் திசைவேத்தில் ஒருவர் பூமியிலிருந்து சந்திரனை சென்றடைய ஆகும் காலம்

(A) 5 வினாடிகள் **(B) 2 வினாடிகள்** (C) 5 நிமிடங்கள் (D) ஒரு நிமிடம்

96. ஒளியின் திசைவேகத்தை நெருங்கியுள்ள திசைவேகத்துடன் செல்லும் துகளின் திசைவேகம் அதிகரிக்கும் போது, அதன் நிறையானது

(A) அதிகரிக்கும் (B) குறையும் **(C) மாறாது** (D) இவை எதுவுமில்லை

97. பூமிக்கு வெளியே உருவாகும் ஒரு வகைக் கதிர்

(A) x- கதிர் **(B) காஸ்மிக் கதிர்** (C) ஆல்பா கதிர் (D) பீட்டா கதிர்

98. கிளர் ஒளி ஒரு (Fluorescent) குழல் விளக்கில்

(A) கட்புலனாகும் ஒளிக்கதிர், கட்புலனாகும் ஒளிக்கதிராக மாறுகிறது

(B) கட்புலனாகும் ஒளிக்கதிர், புறஊதாக்கதிராக மாறுகிறது

(C) புறஊதாக் கதிர், புறஊதாக் கதிராக மாறுகிறது

**(D) புறஊதாக் கதிர், கட்புலனாகும் கதிராக மாறுகிறது**

99. எந்த கதிரியக்க மாசு கட்டிடப் பொருட்களில் இருப்பதாக மக்களால் சமீபத்தில் கருதப்பட்டது?

(A) புளுட்டோனியம் **(B) தோரியம்** (C) ரேடான் (D) ரேடியம்

100. அதிக காற்று வீசும் பகுதியான இந்திய துணைக் கண்டத்தில் காற்றிலிருந்து எவ்வளவு மின்சாரம் உற்பத்தி செய்ய முடியும் என கணக்கிடப்பட்டுள்ளது?

**(A) 15,000 MW** (B) 20,000 MW (C) 25,000 MW (D) 10,000 MW



winmeen.com